# இன்றைய இறைவார்த்தை

# 24-07-2015

## ஆண்டின் பொதுக்காலம் 16ஆம் வாரம் – வெள்ளி

## முதல் ஆண்டு

**முதல் வாசகம்:**

மோசே வழியாகத் திருச்சட்டம் அருளப்படுகிறது.

**விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம். 20 : 1 – 17**

கடவுள் அருளிய வார்த்தைகள் இவையே: நானே உன் கடவுளாகிய ஆண்டவர். அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தலாகாது. மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ளமாட்டேன். என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் தண்டித்துத் தீர்ப்பேன். மாறாக என் மீது அன்பு கூர்ந்து என் விதிமுறைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு காட்டுவேன்.

உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே. ஏனெனில், தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் தண்டியாது விடார். ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய். ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே அன்று நீயும் உன் மகனும் மகளும் உன் அடிமையும் அடிமைப் பெண்ணும் உன் கால்நடைகளும் உன் நகர்களுக்குள் இருக்கும் அன்னியனும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். ஏனெனில், ஆண்டவர் ஆறு நாள்களில் விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும், அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு ஆண்டவர் ஓய்வு நாளுக்கு ஆசிவழங்கி அதனைப் புனிதப்படுத்தினார்.

உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு அளிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி, உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட. கொலை செய்யாதே. விபசாரம் செய்யாதே. களவு செய்யாதே. பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே. பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே. பிறர் மனைவி, அடிமை, அடிமைப் பெண், மாடு, கழுதை, அல்லது பிறர்க்கு உரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 19 : 8, 9, 10, 11 (பல்லவி: யோவான் 6:68)**

**பல்லவி: ஆண்டவரே, நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன.**

1. ஆண்டவரின் நியமங்கள் சரியானவை. அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. ஆண்டவரின் கட்டளைகள் ஒளிமயமானவை. அவை கண்களை ஒளிர்விக்கின்றன. பல்லவி
2. ஆண்டவரைப் பற்றிய அச்சம் தூயது. அது எந்நாளும் நிலைத்திருக்கும். ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையானவை. அவை முற்றிலும் நீதியானவை. பல்லவி
3. அவை பொன்னினும், பசும் பொன்னினும் மேலாக விலைமிக்கவை. தேனினும், தேனடையினின்று சிந்தும் தெளிதேனினும் இனிமையானவை. பல்லவி
4. அவற்றால் அடியேன் எச்சரிக்கப்படுகின்றேன். அவற்றைக் கடைப்பிடிப்போருக்கு மிகுந்த பரிசுண்டு. பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (லூக்கா 8:15)**

அல்லேலூயா, அல்லேலூயா!
சீரிய நல் உள்ளத்தோடு வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்து,
மன உறுதியுடன் பலன் தருகிறவர் பேறுபெற்றோர்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

இறைவார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொள்பவர்கள் பயன் அளிப்பார்.

**✠ தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 13 : 18 – 23**

அக்காலத்தில் இயேசு தம் சீடருக்குக் கூறியது: “விதைப்பவர் உவமையைப் பற்றிக் கேளுங்கள்: வழியோரம் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறையாட்சியைக் குறித்த இறை வார்த்தையைக் கேட்டும் புரிந்து கொள்ள மாட்டார்கள். அவர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்வான். பாறைப் பகுதிகளில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், அவர்கள் வேரற்றவர்கள். எனவே அவர்கள் சிறிது காலமே நிலைத்திருப்பார்கள். இறைவார்த்தையின் பொருட்டு வேதனையோ இன்னலோ நேர்ந்த உடனே தடுமாற்றம் அடைவார்கள். முட்செடிகளுக்கு இடையில் விழுந்த விதைகளுக்கு ஒப்பானோர் இறை வார்த்தையைக் கேட்டும் உலகக் கவலையும் செல்வ மாயையும் அவ்வார்த்தையை

நெருக்கிவிடுவதால் பயன் அளிக்க மாட்டார்கள். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொள்வார்கள். இவர்களுள் சிலர் நூறு மடங்காகவும், சிலர் அறுபது மடங்காகவும், சிலர் முப்பது மடங்காகவும் பயன் அளிப்பர்.”

கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.

**சிந்தனைக்கு:**
இறையாட்சி பற்றிய நற்செய்தியை அறிவித்த இயேசு உவமைகள் வழி மக்களுக்குப் போதித்தார். இந்த உவமைகள் தனித்தன்மை வாய்ந்த கதைகள். அவை பொதுவாக மக்களைச் சிந்திக்கத் தூண்டுகின்ற பண்புடையவை. இயேசுவின் உவமைகளைக் கேட்ட மக்கள் கடவுளின் வார்த்தையை ஏற்று, அது விடுக்கும் சவாலுக்குப் பதிலளிக்க அழைக்கப்பட்டார்கள். பொதுவாக இயேசு உவமைகளை விளக்கி, அவற்றின் பொருள் இதுதான் என்று கூறுவதில்லை. நற்செய்தி நூல்களில் இரு உவமைகளுக்கு மட்டுமே இயேசு விளக்கம் அளித்தார். அவை விதைப்பவர் பற்றிய உவமையும், வயலில் தோன்றிய களைகள் பற்றிய உவமையும் ஆகும். இந்த விளக்கங்கள் இயேசுவால் நேரடியாக வழங்கப்பட்டன என்பதைவிட, தொடக்க காலத் திருச்சபை இயேசுவின் உவமைகளை எவ்வாறு புரிந்து கொண்டது என்பதையே காட்டுகின்றன என அறிஞர் கருதுகின்றனர்.

உவமையில் வருகின்ற நிலங்கள் நான்கு வகை. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பண்பு கொண்டவை. வழியோரப் பகுதி, பாறைப் பகுதி, முட்செடிப் பகுதி, நல்ல நிலம் என நான்கு வகை நிலங்களும் விவரிக்கப்படுகின்றன. இறைவார்த்தையைக் கேட்கின்ற மனிதர்கள் எல்லாருமே முழு மனத்தோடு அதைக் கேட்டு, உள்ளத்தில் ஏற்று, அதன்படி செயல்பட முன்வருவதில்லை என இந்த உவமை காட்டுகிறது. நல்ல நிலம் என்றால் என்ன? நம்மைத் தேடி வருகின்ற இறைவார்த்தையை நாம் ஏற்க முன்வர வேண்டும். இறைவார்த்தை நம்மில் ஆழமாக வேரூன்றி உறுதியாக நிலைக்க வேண்டும். கடவுளிடமிருந்து நம்மைப் பிரிக்கின்ற உலகக் கவலை மற்றும் செல்வ மாயைகளுக்கு இடம் கொடாமல் இறைவார்த்தையைக் காத்திட வேண்டும். இவ்வாறு செயல்படுவோர் பண்பட்ட, நல்ல நிலமாக இருந்து இறைவார்த்தை என்னும் விதையைத் தம்முள் ஏற்பார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் இறைவார்த்தை வேரூன்றி வளரும் சுவைமிகுந்த கனியைக் கொடுக்கும். நாம் நல்ல நிலமாக விளங்க வேண்டும் என்றால் நம் இதயம் பண்பட வேண்டும். நம் சிந்தனைகள் கடவுளின் எண்ணத்தைப் பிரதிபலிக்க வேண்டும். நம் உணர்வுகள் கடவுளின் விருப்பத்திற்கேற்ப நெகிழ்ச்சி பெற வேண்டும். நம் செயல்கள் அவருடைய திட்டப்படி வடிவம் ஏற்க வேண்டும். இறைவார்த்தையை நம் உள்ளத்தைப் பண்படுத்த செபிப்போம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********